## ‘முதல்வர் மருந்தகம்’ திட்டம் என்பது உயிர் காக்கும் திட்டம்!

## செயற்கை நிதி நெருக்கடியை ஒன்றிய அரசு ஏற்படுத்தினாலும்

# தனது ஆளுமைத் திறத்தால் முறியடித்து செயல்படும் முதலமைச்சருக்கு வாழ்த்து!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஆக. 19 - ஒன்றிய பி.ஜே.பி.. அரசின் நிதி நெருக்கடியையும் எதிர்கொண்டு, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையில் செறிவாக வழி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சரின் விடுதலை நாள் உரையை வரவேற்று பாராட்டி, வாழ்த்துப் பூங்கொத்துக்களை அளிப்பதாக திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நேற்றைய ஆகஸ்ட் 15 விடுதலை நாள் விழாவில், நமது ‘திராவிட மாடல்’ ஆட்சியின் எடுத்துக்காட்டான முதலமைச்சர், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் ஆற்றிய உரை மிகவும் சிறப்பாகவும், சாதனைச் சரித்திரத்தின் ஒரு பகுதியாகவும் அமைந்ததைக் கேட்டு, நாம் மகிழ்ந்தோம் - அதுபோல், மக்களும் மகிழ்ந்து வரவேற்பார்கள் என்பது உறுதி!

**‘விடுதலை’ நாளில் ‘திராவிட மாடல்’ முதலமைச்சரின் சிறப்பான உரை!**

“திராவிட மாடல் என்றால் என்ன?” என்று கேட்பவர்களுக்கு நான் பல முறை விளக்கமளித்தி ருந்தாலும், அதனை மீண்டும் ஒருமுறை இங்கே குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்.

வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

பொருளாதாரம் கல்வி சமூகம் சிந்தனை செயல்பாடு ஆகிய அய்ந்தும் ஒரு சேர வளர வேண்டும்.

அதுதான் தந்தை பெரியாரும், பேறறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!”

“.......தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் வழித்தோன்றல் மட்டுமல்ல; அவர்கள் நினைத்த செயலைச் செய்து காட்டும் வழிவழித் தொடர்ச்சியாக நான் செயல்பட்டு வருகிறேன்.

மக்களுக்கு உண்மையாக இருப்பதே மக்கள் தொண்டு என்று செயல்பட்டு வரும் எனக்கு தமிழ்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக அளித்து வரும் வெற்றிக்கு நான் தலைவணங்குகிறேன்.

நீங்கள் எனக்கு அளித்து வரும் வெற்றியின் மூலமாக தமிழ்நாட்டைத் தலைநிமிர வைப்பேன். தமிழ்நாட்டின் உன்னதமான கோட்பாடுகளை இந்தியா முழுமைக்கும் செயல்படுத்திக் காட்டும் கடமையும், பொறுப்பும் நமக்கு உண்டு.”

முதலமைச்சரின் இந்த உரை விசாலப் பார்வை, விரிந்த ஆளுமைத் திறனையும் கொண்ட ஆட்சி ‘திராவிட மாடல்’ ஆட்சி என்பதை உலகுக்குப் பறைசாற்றிய, உயரிய, தனித்தன்மை வாய்ந்த உரையாகும்!

‘முதல்வர் மருந்தகம்’ திட்டம் உன்னதமானது!

ஏழை, எளிய மக்கள் உடல்நலன் காக்க ‘முதல்வர் மருந்தகம்’ என்று அறிவித்துள்ள புதிய திட்டம், வரும் பொங்கல் திருநாளில் செயல்படுத்தவிருப்பதன் அறிவிப்பு பொங்கலின் சுவையைவிட இனிக்கும் - ஏழை, எளிய மக்கள் - ஜாதி மத வேறுபாடின்றி நல் உயிர் காக்கும் உயரியத் திட்டம்!

ஒருபுறம் செயற்கை நிதி நெருக்கடியை ஒன்றிய அரசு ஏற்படுத்திட்டாலும், அதனை தனது ஆளுமை அறிவுத் திறத்தால், “தடைக் கற்கள் உண்டெனினும் அவற்றைத் தாண்டும், தாங்கும் தடந்தோள்கள் எமக்குண்டு’’ என்று இன்று வென்று காட்டும் நம் முதலமைச்சருக்கும், அவர்தம் புரட்சித் திட்டங்கள் பூத்துக் குலுங்கும் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் வாழ்த்துப் பூங்கொத்தை மக்கள் சார்பில் அளிப்பதில் மகிழ்ச்சிக் கொள்கிறோம்!

திராவிடம் வெல்லும் - நாளைய

வரலாறு அதைச் சொல்லும்!

இவ்வாறு திராலிட கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




## அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரை!

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!





திண்டுக்கல், ஆக. 19- திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழகக் கூட்டம் இன்று (19.08.2024, திங்கட்கிழமை,) மாலை சரியாக 04.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி அவர்கள் சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையில் திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடு மஹாலில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மேயர் மற்றும் துணை மேயர், ஒன்றிய பெருந்தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள் மற்றும் பேரூராட்சிமன்றத் தலைவர்கள்; ஆகிய அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1. செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழா.

2. கழக உறுப்பினர் உரிமை சீட்டு விநியோகித்தல்.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## திருவண்ணாமலை மாவட்டம் -

# ஜவ்வாதுமலையில் ரூ.2.91 கோடியில் சாகச சுற்றுலா கட்டடம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!



திருவண்ணாமலை, ஆக. 19- திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஜவ்வாது மலை ஒன்றியத்தில் பலாமரத்தூர் கிராமத்தில்சுற்றுலாத்துறை சார்பில் கட்டடப்பட்டு வரும் சாகச சுற்றுலா கட்டடம் மற்றும் கோவிலூர் கிராமத்தில் அமைந்துள்ள கோலப்பன் ஏரியை மேம்படுத்துவதற்காகன வளர்ச்சி பணிகள் குறித்தும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ. கிரி பெ.சு.தி.சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த சுற்றுலாத்துறைஅமைச்சர் கா.ராமச்சந்திரன், திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறும் சுற்றுலா வளர்ச்சி பணிகளை ஆய்வு மேற்கொள்ளுவதற்காக வந்துள்ளதாகவும், இந்த பகுதியில் சுற்றுலாத்துறை சார்பாக 22 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து துறைகளிலும் இந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து பணிகளையும் முழுமையாக விரைந்து முடிக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதன் படி சுற்றுலாத்துறை சார்பாகமேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளும் விரைந்து முடிக்கும் பொருட்டு துறை ரீதியிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது என தெரிவித்தார். திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை பகுதியில் ரூபாய் 2.91 கோடி மதிப்பீட்டில் சாகச சுற்றுலா கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று மேலும் சாகச சுற்றுலா வளர்ச்சி பணியானது 8 ஏக்கர் பரப்பளவில் வருகிறது. அமைக்கப்படவுள்ளது எனவும். தற்பொமுது இப்பகுதியை சுற்றிலும் தடுப்புச்சுவர் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் வாகனம் நிறுத்துமிடம்,

நுழைவு வாயில், உணவகம், நிர்வாக அலுவலகம், கழிப்பறை போன்ற பணிகளும் இப்பகுதியில் நடைபெற்று வருகிறது என்றார். ஒப்பந்ததாரர்கள் உடனடியாக இந்த நிதியானந்திற்குள்ளாக இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். தமிழகத்திற்கு வெளி நாடுகள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக் கைஅதிகரித்துள்ளது என்பதால் தமிழகம்முழுவதும் சுற்றலாத்துறை சார்பாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் சுற்றுலாத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள உணவகங்கள் மற்றும் விடுதிகளை மேம்படுத்தும் பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் தமிழ்நாடு முதல்வர் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல பல்வேறு வளர்ச்சி பணிகளை செய்து வருவதாகவும், தனியார் பங்களிப்புடன் 20,000 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை செய்ய ஆணை பிறப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, கோவிலூர் கோலப்பன் ஏரியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டு பணிகள் குறித்து துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், சுற்றுலா அலுவலர் (பொ) கார்த்தி, ஒன்றிய குழு துணை தலைவர் மகேஸ்வரி செல்வம், வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் ரேணுகோபால், உதவி கோட்ட பெறியாளர் திருநாவுகரசு, தாசில்தார் வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் ப.கேசவன், சிவசேமன், ஊராட்சி மன்ற தலைவர் நடேசன், மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## ராஜா தமிழ்மாறன் புகழ் அஞ்சலி உரை!

# குவைத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு புகழ் அஞ்சலி! விருதுகள் வழங்கல்!

## எம்.பாவாசா - ராமதாஸ் - இராணிப்பேட்டை கிளாட்வின் பாக்கியராஜ் - ஜாகீர் உசேன் பங்கேற்பு!

குவைத், ஆக. 18- குவைத்தில் தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு புகழ் அஞ்சலி நிகழ்ச்சி மேட்டுப்பட்டி MRM நபில் ராஜா ஒருங்கிணைப்பில் பாவாசா தலைமையில் சிறப்பு விருந்தினர் BIKE Riders ராஜா தமிழ் மாறன் காணொலி வாயிலாக கலந்து கொண்டு தமிழ் நாட்டின் தலைமகன் மு.க ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சியின் பெருமைகளை நலத்திட்டங்களை மக்கள் மத்தியில் நாம் எடுத்து செல்லவேண்டிய அவசியத்தை யும் எதிர் வரும் ஊரக உள்ளாட்சி தேர்தலிலும் 2026 சட்டமன்ற தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான அணி வெற்றி பெற வேண்டும். அதற்கு புலம் பெயர் தமிழர்கள் கழக தோழர்கள் எப்படி செயல்பட வேண்டும் என விளக்கமாக உரையாற்றினார், சிறப்பு விருந்தினர் ராஜா தமிழ்மாறன் முன்னிலை யில் சமூக ஆர்வலர் வேலூர் ஜான் ரமேஷ் முகமது நாசர் சாமி மங்கலேஸ்வரன் ஸ்டீபன் ரொசாரியோ வெங்கடேசன் முனிசாமிசக்திவேல் அழகர்சாமிதண்டபாணி சண்முகம் துரைமுருகன் சஜாத்து அலிகான் முகமது சிராஜுதீன் கருப்பையா பிரபாகரன் சங்கர் சண்முகம் வெங்கடேஷ் அமுதா மார்ட்டின் அசோக் குமார் அர்ஜுனன் உள்ளிட்ட 30 கழக உடன்பிறப்புகளுக்கு கலைஞர் 2024 விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும். மற்றும் சமூக ஆர்வலர்களும் திராவிட சிந்தனையாளர்களும் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் அமைப்புச் செயலாளர் ராஜா முஹம்மது நன்றி உரை யாற்றினார்.

# தாணிக்கோட்டகம் அரசுப் பள்ளிக்கு ரூ.3.75 லட்சம்!

## தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கினார்!

வேதாரண்யம், ஆக. 19- வேதாரண்யம் அருகேயுள்ள தாணிக்கோட்டகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் பள்ளி வளர்ச்சிக்காக தொழிலதிபர் முரசொலி சிங்காரம் ரூ.3.75 லட்சம் வழங்கினார்.

பள்ளியின் இலக்கிய மன்றம், விளையாட்டு பரிசளிப்பு, சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு, 100 சதவீதம் தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கல் உள்ளிட்ட ஐம்பெரும் விழா வியாழக்கிழமை நடை பெற்றது.

விழாவுக்கு பள்ளித் தலைமையாசிரியர் அ.தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கே.சி. சுபாஷினி, பணி ஓய்வு பெற்ற முதன்மைக் கல்வி அலுவலர் சாமி, சத்திய மூர்த்தி, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் சி.கார்த்திகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், பள்ளியின் 100 சதவீத தேர்ச்சிக்கு உதவிய 23 ஆசிரியர்களை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரும் தொழிலதிபர் முரசொலி சிங்காரம் பாராட்டினார். அப்போது, அந்த ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசாக தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.1.15 லட்சம் வழங்கினார்.

மேலும், காலிப்பணியிடங்களை ஈடு செய்து நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் ஊதியத்துக்காக ரூ. 2 லட்சம் மாணவர்களுக்கான பரிசுத் தொகையாக ரூ.60,000 என மொத்தம் ரூ.3.75! லட்சம் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்.

விழாவில், திருப்பூண்டிஅரசுப் பள்ளி தலைமையாசிரியர் ஆறு. துரைக்கண்ணன் ‘வையத் தலைமை கொள்’ எனும் தலைப்பில் பேசினார். அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் இள.தொல்காப்பியன், சீ. முருகேசன், சோ. சிங்காரவேலன், கா. அகோர மூர்த்தி உள்ளிட்டோர் பேசினர்.

விளையாட்டு மற்றும் இலக்கியப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.



தாணிக்கோட்டகம் அரசுப் பள்ளியில், 100 சதவீத தேர்ச்சிக்கு உதவிய ஆசிரியர்களுக்கு தலா ரூ. 5 ஆயிரம் ரொக்கத்தை தொழிலதிபர் முரசொலி சிங்காரம் வழங்கி பாராட்டினார். இதில் முதன்மைக் கல்வி அலுவலர் சுபாஷினி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட குருவிகுளம் ஒன்றியம் வாகைகுளத்தில் வாகை மக்கள் இயக்கம் ஒருங்கிணைப்பு சார்பில் தேவநேய பாவாணர் திடலில் பெருந்தமிழர்கள் பெருவிழா வாகை மக்கள் இயக்கம் தோழர் நேருதாஸ் கென்னடி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக நாடாளுமன்ற குழு தலைவர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.உடன் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார்,சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா (ஓட்டப்பிடாரம்)சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்) முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல் ராஜன்,மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி,தியாகி இம்மானுவேல் சேகரனார் தவப்புதல்வி சுந்தரி பிரபாராணி உள்பட பலர் உள்ளனர்.

## திருவள்ளூர் மாவட்ட கவுன்சிலர்கள் ஆலோசனைக் கூட்டம்!

திருவள்ளூர், ஆக.19– திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிக் குழு அலுவலகத்தில் மாவட்ட கவுன்சிலர் கூட்டம் மாவட்ட ஊராட்சி குழுத் தலை வரும் திட்டக் குழு தலைவருமான கே.வி.ஜி. உமாமகேஸ்வரி வேணு தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட ஊராட்சி குழு அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அமைத்திட மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடன் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி. தேசிங்கு , ஊராட்சி செயலர் முருகன் மாவட்ட கவுன்சிலர்கள் இந்திராகுண சேகரன், ஏ.ஜி.ரவி, சாரதம்மாள் முத்துசாமி, விஜயகுமாரி சரவணன், டி.தென்னவன், சரஸ்வதிசந்திர சேகர், சிவசங்கரி உதயகுமார், மோரை மு.சதீஷ் குமார், கோ.சுதாகர், ஆர்.டி.இ. உதயசூரியன், தேசராணி தேசப்பன், சித்ரா முனுசாமி, தேவி தயாளன், உள்பட பலர் பங்கேற்றனர்.